//மின்னஞ்சலில்//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்

ந. க. எண். 6754 / அ4 / இ4 / 2024, நாள். 17.02.2024.

*****

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களாகப் பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் பணியாளர்கள் – பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் சார்ந்து கருத்துருக்கள் அனுப்புவது – அறிவுரைகள் வழங்குவது – தொடர்பாக.

******

தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் பள்ளிக் கல்வித் துறையில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்களாகப் பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் பணியாளர்களின் 53 வயது தளர்வாணை, பவானிசாகர் பயிற்சி தாமதமாக முடித்தமைக்கு விதித்தளர்வளித்து தகுதிகாண் பருவம் முடிக்கக் கோரும் கருத்துருக்கள் உரிய காலத்தில் சார்நிலை அலுவலகத்தில் முடிக்கப்படாமலும், அரசுக்கு அனுப்பப்பட வேண்டிய கருத்துருக்கள் உரிய காலத்தில் அனுப்பப்படாமலும், சார்ந்த பணியாளர்கள் ஓய்வு பெறும் நிலையிலோ அல்லது ஓய்வு பெற்ற பின்னரோ கருத்துருக்கள் இவ்வலுவலகத்தில் பெறப்பட்டு வருகிறது. இக்கருத்துருக்கள் அரசுக்கு அனுப்பப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அரசால் மிகவும் கண்டிக்கப்பட்டு ஆணைகள் வழங்கப்படுகிறது. எனவே, கீழ்க்காணும் விவரங்களை 29.02.2024க்குள் உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

1. நேரடி நியமனம் மூலம் பணிநியமனம் பெற்றுள்ள இளநிலை உதவியாளர்கள்/ தட்டச்சர்களுக்கு உரிய விதிகளையும், பணி நியமன ஆணையில் வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகளையும் (Conditional Appointment) பூர்த்தி செய்து உடன் பணிவரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும்.

2. நேரடி நியமன உதவியாளர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் பணிநியமனம் பெற்று, தகுதிகாண் பருவக் காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறாமல் அதற்கான விதித்தளர்வு கோரும் கருத்துருக்களும் பெறப்பட்டு வருகிறது. இவை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

3. இதுநாள் வரை பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடிக்கப்பட்டு, நாளது வரை தகுதிகாண் பருவம் முடிக்கப்படாமல் உள்ள பணியாளர்களின் விவரங்களை (உதவியாளர் / இளநிலை உதவியாளர்) இணைப்பில் காணும் படிவத்தில் தனித்தனியாக பூர்த்தி செய்து அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

4. 53 வயது கடந்துவிட்டமையால் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்கு கோரும் கருத்துருக்களை உரிய காலத்திற்குள் (53 வயது நிறைவடைந்தவுடன்) அனுப்பப்பட வேண்டும்.

5. அ4 பிரிவிற்குத் தொடர்பான மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் / சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளின் விவரங்களை படிவம் 3இல் பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும்.

**இணைப்பு :** படிவம் 1, 2 மற்றும் 3

17/2/24

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி).

பெறுநர் – அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

19.2.2024